## மே – 06 – உயிர்ப்புக்கால 6ம் வார ஞாயிறு

### “என் அன்பில் நிலைத்திருங்கள்” (யோவா. 15:9)

### முதல் வாசகம் : தி.பணி 10 : 25-26, 34-35, 44-48

அந்நாட்களில் பேதுரு உள்ளே வரவே, கொர்னேலியு அவரை எதிர்கொண்டு போய் அவர் காலில் விழுந்து வணங்கினார்.பேதுரு, ”எழுந்திடும் நானும் ஒரு மனிதன்தான்” என்று கூறி அவரை எழுப்பினார். அப்போது பேதுரு பேசத் தொடங்கி, ”கடவுள் ஆள் பார்த்துச் செயல்படுவதில்லை என்பதை நான் உண்மையாகவே உணர்கிறேன்.எல்லா இனத்தவரிலும் அவருக்கு அஞ்சி நடந்து நேர்மையாகச் செயல்படுபவரே அவருக்குபேதுரு தொடர்ந்து பேசிக்கொண்டிருக்கும்போது அவருடைய சொற்களைக் கேட்ட அனைவர்மீதும் தூய ஆவி இறங்கிவந்தது.பேதுருவோடு வந்திருந்த விருத்தசேதனத்தில் நம்பிக்கையுடையோர் தூய ஆவியின் கொடை பிற இனத்தவர்மீதும் பொழியப்பட்டதைக் கண்டு மலைத்துப் போயினர் ஏனென்றால் அவர்கள் பரவசப்பேச்சுப் பேசிக் கடவுளைப் போற்றிப் பெருமைப்படுத்தியதைக் கண்டார்கள்.பேதுரு, ”நம்மைப்போலத் தூய ஆவியைப் பெற்றுக்கொண்ட இவர்கள் தண்ணீரால் திருமுழுக்குப் பெறுவதை யார் தடுக்க முடியும்?” என்றுகூறி,இயேசு கிறிஸ்துவின் பெயரால் அவர்களுக்குத் திருமுழுக்குக் கொடுக்கப் பணித்தார். பின்பு அவர்கள் சிலநாள் தங்களுடன் தங்கியிருக்குமாறு அவரிடம் வேண்டினார்கள். ஏற்புடையவர்.

**பதில்பாடல் :** பிற இனத்தார் முன் ஆண்டவர் தம் நீதியை வெளிப்படுத்தினார்.

### இரண்டாம் வாசகம்: 1 யோவான் 4 : 7 – 10

அன்பார்ந்தவர்களே, ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துவோமாக! ஏனெனில் அன்பு கடவுளிடமிருந்து வருகிறது. அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள். அவர்கள் கடவுளை அறிந்துள்ளார்கள். அன்பில்லாதோர் கடவுளை அறிந்து கொள்ளவில்லை ஏனெனில், கடவுள் அன்பாய் இருக்கிறார்.நாம் வாழ்வு பெறும் பொருட்டுக் கடவுள் தம் ஒரே மகனை உலகிற்கு அனுப்பினார். இதனால் கடவுள் நம்மீது வைத்த அன்பு வெளிப்பட்டது.நாம் கடவுள்மீது அன்பு கொண்டுள்ளோம் என்பதில் அல்ல, மாறாக அவர் நம்மீது அன்புகொண்டு தம் மகனை நம் பாவங்களுக்குக் கழுவாயாக அனுப்பினார் என்பதில்தான் அன்பின் தன்மை விளங்குகிறது.

### நற்செய்தி : யோவான் 15 : 9 - 17

அக்காலத்தில் இயேசு தம் சீடரை நோக்கிக் கூறியதாவது:என் தந்தை என் மீது அன்பு கொண்டுள்ளதுபோல நானும் உங்கள்மீது அன்பு கொண்டுள்ளேன். என் அன்பில் நிலைத்திருங்கள்.நான் என் தந்தையின் கட்டளைகளைக் கடைப்பிடித்து அவரது அன்பில் நிலைத்திருப்பது போல நீங்களும் என்கட்டளைகளைக் கடைப்பிடித்தால் என் அன்பில் நிலைத்திருப்பீர்கள்.என் மகிழ்ச்சி உங்களுள் இருக்கவும் உங்கள் மகிழ்ச்சி நிறைவு பெறவுமே இவற்றை உங்களிடம் சொன்னேன்.”நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பதுபோல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புகொண்டிருக்க வேண்டும் என்பதே என்கட்டளை.தம் நண்பர்களுக்காக உயிரைக் கொடுப்பதைவிட சிறந்த அன்பு யாரிடமும் இல்லை. நான் கட்டளை இடுவதையெல்லாம் நீங்கள் செய்தால் நீங்கள் என் நண்பர்களாய் இருப்பீர்கள்.இனி நான் உங்களைப் பணியாளர் என்று சொல்ல மாட்டேன். ஏனெனில் தம் தலைவர் செய்வது இன்னது என்று பணியாளருக்குத் தெரியாது. உங்களை நான் நண்பர்கள் என்றேன் ஏனெனில் என் தந்தையிடமிருந்து நான் கேட்டவை அனைத்தையும் உங்களுக்கு அறிவித்தேன்.நீங்கள் என்னைத் தேர்ந்து கொள்ளவில்லை நான்தான் உங்களைத் தேர்ந்து கொண்டேன். நீங்கள் கனி தரவும், நீங்கள் தரும் கனி நிலைத்திருக்கவும் உங்களை ஏற்படுத்தினேன். ஆகவே நீங்கள் என் பெயரால் தந்தையிடம் கேட்பதையெல்லாம் அவர் உங்களுக்குக் கொடுப்பார்.நீங்கள் ஒருவர் மற்றவரிடம் அன்பு கொள்ள வேண்டும் என்பதே என் கட்டளை“ என்றார்.

**தியானம்:** உயிர்ப்புக்காலத்தின் 6வது ஞாயிறு வார இறைவார்த்தைப் பகுதிகள் “நான் உங்களிடம் அன்பு கொண்டிருப்பது போல நீங்களும் ஒருவர் மற்றவரிடம் அன்புகொண்டிருக்க வேண்டும் என்பதே என் கட்டளை” (யோவா. 15:1) என்று கூறி தமது அன்பில் நிலைத்திருக்க எமக்கு அழைப்பு விடுக்கின்றார். இறைமகன் இயேசு நம்மீது கொண்டுள்ள அன்பின் நிமித்தம் தம்மையே நமக்காக கையளித்தார். அதன் மூலம் அந்த அன்பு வெளிப்படுத்தப்பட்டுள்ளது. அவர் கடவுளாயிருந்தும் கடவுள் தன்மையை பற்றிக்கொண்டிருப்பவராக அல்லாமல் தம்மைத் தாழ்த்தி எம்மை நண்பர்கள் என்று அழைக்கின்றார். நாங்கள் அவரது பணியாளர்கள். எனினும் எதையும் அவர் மறைவாக வைத்திருக்கவில்லை. தமது தந்தை எதையெல்லாம் அவருக்கு வெளிப்படுத்தினாரோ அவை அனைத்தையும் இறைமகன் நமக்கு வெளிப்படுத்திவிட்டார். தமது தந்தையோடு அவர் கொண்டிருந்த உறவுதான் அவரது வெற்றியின் இலட்சியமாக இருந்தது. எல்லாச் சூழ்நிலைகளிலும் அவர் அந்த உறவில் நிலைத்திருந்தார். இத்தனைக்கும் இறைமகன் இயேசு எம்மிடம் கேட்பது நாம் நமது அன்பை அயலவர்களிடம் காட்டவேண்டும் என்பதாகும். இதுவே அவர் நமக்கு வழங்கியுள்ள அன்புக்கட்டளை. இது அன்பு, தாழ்ச்சி, பொறுமை, அர்ப்பணிப்பு போன்ற நற்பண்புகளை அடிப்படையாகக் கொண்டது. இன்றைய முதல் வாசகத்தில் கடவுள் எல்லா மனிதர்களுக்கும் சமமே. எல்லா இனத்தவரிலும் அவருக்கு அஞ்சி நடந்து செயல்படுபவர் அனைவரும் அவருக்கு ஏற்புடையவர் என்று பேதுரு தெரிவிக்கின்றார். இதிலிருந்து கடவுள் வேற்றுமை பார்ப்பவரல்ல என்பது தெளிவாகின்றது. அதுபோலவே நாமும் ஆள் பார்த்து அன்பு செய்படுவதனை நிறுத்தி எல்லோரையும் அன்பு செய்து வாழ்வதன் மூலம் நாம் இயேசுவின் நண்பர்களாக வாழமுடியும்.